# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 227/2022 நாள்.14.07.2025

PW1- திருமதி. கீதா, க /பெ. திரு.பத்மநாபன்

மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 3 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

1வது பிரதிவாதி மாலினி என்னுடைய தாயார் என்றும், 3ஆம் பிரதிவாதி வெங்கட்ராமன் எனது சகோதர் என்றால் சரிதான். 2ஆம் பிரதிவாதி மூத்தவர் என்றால் ஆமாம். குடும்பத்தில் எனக்குதான் முதலில் திருமணம் என்றால் ஆமாம், அதன்பிறகு 2வது வாதிக்கு திருமணம் என்றால் ஆமாம், அதன்பிறகுதான் பிரதிவாதிகள் 2, 3க்கு திருமணம் என்றால் ஆமாம், அப்பா உயிருடன் இருக்கும்போது திருமணம் என்றால் ஆமாம். அவர் பணிவு ஒய்வு பெற்று இறந்துவிட்டார் என்றால் ஆமாம். தாவா 1வது அயிட்ட சொத்து எனது தாயார் திருமணத்திற்கு பிறகு வாங்கியது என்றால் ஆமாம். எனது தாயாருக்கு நகை நட்டு போட்டார்கள் என்றால் ஆமாம். என் அப்பா பொதுமான அளவு குடும்பத்திற்கு தகுந்தாற் போல் சீர்வரிசை எனக்கும் எனது சகோதரிக்கும் செய்தார் என்றால் ஆமாம். எங்கள் சீர் செய்தநகைகள் எங்களிடம் உள்ளது என்றால் ஆமாம். கண்ணன் டெல்லியிலும், வெங்கம்ராமன் சென்னையிலும் வேலைபார்க்கிறார் என்றால் ஆமாம். அவரவர் குடும்பத்துடன் இருக்கிறார் என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி வெங்கட்ராமன் அவருடைய மனைவிக்கு திருமணத்தின்போது செய்யபட்ட நகைகள் வங்கி லாக்கரில் உள்ளது என்றால் ஆமாம். அதைபோல் என் அம்மாவின் நகையும் அதில் உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய பிராது மற்றம் நிரூபண வாக்குமூலுத்திலும் எந்த நகை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். கட்டபட்ட வீடும் என் அம்மாவும், அப்பாவும் சேர்ந்து கட்டியது என்றால் ஆமாம். 3வது அயிட்டத்தில் 2வதாக உள்ள தொகை ரூ3 லட்சம் என் தாயார் ஏற்கனவே எடுத்துவிட்டார் என்றால் தெரியாது. என் தாயார் கேன்சரால் பாதிக்கபட்டு என் தம்பிதான் வெங்கட்ராமன் பார்வையில் இருந்தார் என்றால் ஆமாம். என் தகப்பனார் இறந்தபிறகு என் தாயரை வெங்கட்ராமன் கவனித்து வருகிறார் என்றால் ஆமாம். வங்கி லாக்கருக்கா ரூ.19,000 எனது தாயார் பெயரில் வைப்பீடு செய்யபட்டது என்றால் தெரியாது. 3வது இனத்தில் உள்ள ரூ 1 1/2 லட்சம் பணம் யார் பெயரில் உள்ளது என்றால் அப்பா கணக்கில் இருந்தது. 1வது இனச்சொத்தை பொறுத்தவரை குடும்ப சொத்து என்பதால் அதை பிரித்து கொள்வதற்கு 1, 3 பிரதிவாதிக்கு ஆட்சேபணை இல்லை என்றால் என் தங்கை கேட்கவேண்டும். குடும்பத்தில் திருமணம் செய்தது வீடு கட்டியது என் அப்பா, அம்மா கடன் வாங்கி செய்தார் என்றால் அம்மா, அப்பாதான் செய்தார்கள் வெளியில் எதுவும் வாங்கவில்லை. 1வது திருமணம் பெற்றோர்கள் செய்து கணவர் இறந்துவிட்டதால் 2வது திருமணம் என் அப்பாவும், 3ஆம் பிரதிவாதியும் சேர்ந்து செய்துவைத்தார்கள் என்றால் அப்பாதான் செய்துவைத்தார். 1வது திருமணத்திற்கு பிறகு அந்த நகைநட்டு வைத்து பிளாட் வாங்கினேனா என்றால் இல்லை. லாக்கரில் உள்ள நகைகளை அதற்கு உரியவர்கள் அவரவர்களே எடுத்துகொள்ள ஆட்சேபணை இல்லை ஆமாம்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.